மாவட்ட நடுவர் நீதிமன்றம்

(B) Chief Judicial Magistrate Court
தலைமை குற்றவியல் நீதிமன்றம்

(C) Executive Magistrate Court
நிருவாகத்துறை நீதிமன்றம்

(D) In the Courts having jurisdiction of offence occurred or the person concealed or detained
குற்றம் நடந்த இடத்தை அல்லது மறைத்து அல்லது அடைத்து வைக்கப்பட்ட இடங்களை வரையரையாகக் கொண்ட இரு நீதிமன்றங்களிலும்

57. How long the warrant issued by Court is in force?

நீதிமன்றத்தால் வழங்கப்படும் பிடிகட்டளை எவ்வளவு காலத்திற்கு அமலில் இருக்கும்?

(A) 1 year
ஓர் ஆண்டிற்கு

(B) 6 months
6 மாதங்களுக்கு

(C) 3 months
3 மாதங்களுக்கு

(D) until it is cancelled by court or until it is executed
நீதிமன்றம் ரத்து செய்யும் வரை அல்லது பிடிகட்டளை நிறைவேற்றப்படும் வரை

58. Maintenance of a case diary by an investigation officer is

வழக்கை புலன் விசாரணை செய்யும் ஒவ்வொரு காவல்துறை அதிகாரியாலும் நாட்குறிப்பு பேணப்பட வேண்டும் என்பது

(A) Directory
தேவைப்படின்

(B) Mandatory
கட்டாயம்

(C) Discresionary
விருப்பப்படி

(D) As per order of the higher officials
மேலதிகாரியின் உத்தரவின்படி

59. When the Magistrate can discharge the accused in a proceedings instituted upon a complaint and when the offence may be lawfully compounded or is not a cognizable offence before framing of the charge.

முறையீட்டின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில், சம்பந்தப்பட்ட குற்றம் பிடிகட்டளை வழக்காக இல்லாத நிலையில் மேற்படி குற்றம் சட்டப்படி ராசியாகப் போகக் கூடியதாக இருக்கும் நிலையில் எப்பொழுது எதிரி குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பு விடுவிக்கலாம்?

(A) In the absence of the accused
எதிரி வராதபோது

(B) In the absence of the complainant
முறையீட்டாளர் வராதபோது

(C) In the absence of the witnesses
சாட்சிகள் வராத போது

(D) In the absence of the pleader of the complainant
முறையீட்டாளரின் வழக்குரைஞர் வராதபோது

60. In a proceedings instituted upon a complaint in which process fee or other fees payable and if the complainant failed to pay such fee within a reasonable time, the Magistrate may

புகாரின் பேரில் தொடரப்பட்டுள்ள ஒரு நடவடிக்கையில் நீதிமுறை கட்டளைக் கட்டணங்களோ வேறு கட்டணங்களோ செலுத்தத்தக்கனவாக இருக்கும்போது அக்கட்டணங்கள் ஒரு கால அளவிற்குள் செலுத்தப்படவில்லையானால்

(A) adjourn the case to someother date
வழக்கை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கலாம்

(B) order to send summons at the expense of the Government
அரசு செலவில் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடலாம்

(C) dismiss the complaint
அப்புகாரை தள்ளுபடி செய்யலாம்

(D) transfer the case to some other court
வேறு நீதிமன்றத்திற்கு மாற்றலாம்

61. In which case, the accused may send his plea and the fine imposed to the Judicial Magistrate through post?

எந்த வழக்குகளில் எதிரியின் பதிலையும், அவருக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையையும் நீதித்துறை நடுவருக்கு அஞ்சல் வழி மூலம் அனுப்பலாம்?

(A) In a complaint case
முறையீட்டு வழக்கு

(B) In a Summons case
அழைப்பாணை வழக்கில்

(C) In a petty case
சில்லறை வழக்கில்

(D) In a warrant case
பிடி கட்டளை வழக்கு

62. Where a proceedings has been instituted upon a police report the magistrate shall furnish the copies of documents at the expense of

காவல்துறை அறிக்கையின் பேரில் தொடரப்பட்டுள்ள வழக்கில், ஆவணங்களின் நகல்களை யாருடைய செலவில் நடுவர் எதிரிக்கு வழங்கவேண்டும்?

(A) Police
காவல்துறை

(B) Accused
எதிரி

(C) Complainant
புகார்தாரர்

(D) Free of cost
இலவசமாக

63. Where a warrant of arrest may be executed?

பிடிகட்டளையை எங்கு நிறைவேற்றலாம்?

(A) anywhere in India
இந்தியாவின் எவ்விடத்திலும்

(B) anywhere within the state
சம்மந்தப்பட்ட மாநிலத்தின் எந்த இடத்திலும்

(C) anywhere within the District
சம்மந்தப்பட்ட மாவட்டத்தின் எந்த இடத்திலும்

(D) anywhere within the concerned police station limit
சம்மந்தப்பட்ட காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எந்த இடத்திலும்

64. Where an officer in charge of the police station refuses to record information in a cognizable case, to whom the substance of that information in writing to be sent by the complainant?

காவல் நிலைய பொறுப்பு அலுவலர், பிடி கட்டளை வழக்கில் புகாரை பதிவு செய்ய மறுக்கின்றபோது மேற்படி புகாரின் சாரம்சத்தை எழுத்து வடிவில் யாருக்கு அனுப்பலாம்?

(A) District Magistrate
மாவட்ட நடுவர்

(B) The Tahsildar
வட்டாட்சியர்

(C) The Judicial Magistrate
நீதித்துறை நடுவர்

(D) The superintendent of police
காவல் கண்காணிப்பாளர்

65. When an information regarding commission of non-cognizable offence is given to an officer in charge of a police station, shall enter the substance of that information inform prescribed by the Government and refer the informant to the whom?

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் அதிகார எல்லைக்குள் கைது செய்வதற்குரியதல்லாத குற்றமொன்று செய்யப்பட்டிருப்பது பற்றி அவருக்கு தகவல் கொடுக்கும் போது அவர் தாவலின் சாரம்சத்தை உரிய படிவத்தில் பதிவு செய்து தகவல் கொடுத்தவருடன் யாருக்கு அனுப்ப வேண்டும்?

(A) Superintendent
காவல் கண்காணிப்பாளர்

(B) Executive Magistrate
நிர்வாகத்துறை நடுவர்

(C) Judicial Magistrate
நீதித்துறை நடுவர்

(D) District Magistrate
மாவட்ட நடுவர்

66. The District Magistrate shall prepare a panel of names of persons fit to be a appointed as Public Prosecutor or Additional Public Prosecutor for the District

ஒரு மாவட்டத்திற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அல்லது கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞரை நியமனம் செய்யும் பட்டியலை மாவட்ட நடுவர் யாருடன் கலந்து ஆலோசித்து தயாரிக்க வேண்டும்?

(A) High court Judge
உயர்நீதிமன்ற நீதிபதி

(B) Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நடுவர்

(C) Sub divisional Magistrate
உட்கோட்ட நடுவர்

(D) Sessions Judge
அமர்வு நீதிபதி

67. With whose concurrence, the Director of prosecution shall be appointed?

குற்றவழக்கு தொகுப்பு இயக்குநர் யாருடைய ஒப்புதலின் பேரில் நியமிக்கப்படவேண்டும்?

(A) Chief Minister
முதலமைச்சர்

(B) Minister of Law
சட்ட அமைச்சர்

(C) Governor of the State
மாநில ஆளுநர்

(D) Chief Justice of the High Court
உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

68. Who has the power to try the cases relating to Vigilance and ante corruption?

லஞ்ச ஊழல் சம்மந்தப்பட்ட வழக்கை விசாரிக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) District and Sessions Judge
மாவட்ட அமர்வு நீதிபதி

(B) District Magistrate
மாவட்ட நடுவர்

(C) Chief Judicial Magistratre
தலைமை குற்றவியல் நடுவர்

(D) Assistant Sessions Judge
உதவி அமர்வு நீதிபதி

69. The Additional Sessions Judge or Assistant Sessions Judge can try the sessions cases made over by whom

கூடுதல் அமர்வு நீதிபதி அல்லது உதவி அமர்வு நீதிபதி யாரால் மாற்றி அனுப்பக்கூடிய அமர்வு வழக்குகளை விசாரிக்கலாம்?

(A) High Court Judge
உயர்நீதிமன்ற நீதிபதி

(B) Supreme Court Judge
உச்சநீதிமன்ற நீதிபதி

(C) High Court Register
உயர்நீதிமன்ற பதிவாளர்

(D) District and Sessions Judge
மாவட்ட அமர்வு நீதிபதி

70. During trial, if the accused filed a petition recalling a witness for cross examination and the said petition allowed to meet the ends of the justice, who shall pay the reasonable expenses of the witness.

வழக்கு விசாரணையின் போது ஒரு சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்கக்கோரி எதிரி மனு கொடுக்கும் பட்சத்தில் நீதியின் நலன் கருதி நடுவர் மேற்படி சாட்சியை விசாரணைக்கு அழைத்தால் மேற்படி சாட்சிக்குரிய நியாயமான செலவிற்கான தொகையை யார் செலுத்த வேண்டும்?

(A) Central Government
மத்திய அரசு

(B) State Government
மாநில அரசு

(C) Police
காவல் துறையினர்

(D) Accused
எதிரி

71. When a Magistrate is invested with second class power on the date when he commences the trial, but he is invested with first class power before he finishes the trial, and in such circumstances how can he impose punishment?

நடுவர் வழக்கு விசாரணையைத் தொடங்கும்போது இரண்டாம் வகுப்பு நடுவருக்கு உரிய அதிகாரம் மட்டுமே பெற்றிருந்து வழக்கின் இறுதி விசாரணை காலத்தில் முதல் வகுப்பு நடுவருக்குரிய அதிகாரம் வழங்கப்படுமானால் அந்த நடுவர் அந்த வழக்கில் எந்த நடுவரின் அதிகாரத்திற்குட்பட்டு தண்டனை வழங்கலாம்?

(A) Within the powers of Second Class Magistrate
இரண்டாம் வகுப்பு நடுவரின் அதிகாரத்திற்குட்பட்டு

(B) Not exceeding the power of the first class Magistrate
முதல் வகுப்பு நடுவருக்குரிய அதிகாரத்திற்கு மிகாமல்

(C) Transfer the case to Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நடுவர் மன்றத்திற்கு மாற்றலாம்

(D) Transfer the case to the court of second class Magistrate
இரண்டாம் வகுப்பு நடுவர் மன்றத்திற்கு வழக்கை மாற்றலாம்

72. Who is competent to notify the powers and functions of the Director of prosecution and Deputy Directors of prosecution and the area for each of the Deputy Directors?

குற்ற வழக்கு தொடர்பு இயக்குநர் மற்றும் குற்றவழக்கு தொகுப்பு துணை இயக்குநர்களின் அதிகாரங்கள் மற்றும் ஒவ்வொரு குற்றவழக்கு தொகுப்பு துணை இயக்குநருக்கான பகுதிகள் குறித்து யார் அறிவிப்பு வெளியிடலாம்?

(A) High Court
உயர்நீதிமன்றம்

(B) Governor of the State
மாநில ஆளுநர்

(C) State Government
மாநில அரசு

(D) Central Government
மத்திய அரசு

73. In a Criminal Case instituted on behalf of the Government and when the complainant or witnesses attending the court for inquiry who has to pay the reasonable expenses for them?

அரசு சார்பில் தொடுக்கப்பட்ட குற்ற வழக்கில் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகும் குற்ற முறையிடுபவர் அல்லது சாட்சிகளுக்குரிய நியாயமான செலவு தொகையை யார் வழங்க வேண்டும்?

(A) State Government
மாநில அரசு

(B) Police
காவல் துறையினர்

(C) Complainant
குற்ற முறையிடுபவர்

(D) District Administration
மாவட்ட நிர்வாகம்

74. Which of the following persons practising as an advocate for not less than the period mentioned below shall be appointed as Director of prosecution or Deputy Director of Prosecution?

எத்தனை ஆண்டுகளுக்குக் குறையாமல் வழக்கறிஞராகப் பணியாற்றியவரை குற்ற வழக்கு தொகுப்பு இயக்குநராக அல்லது குற்ற வழக்கு தொகுப்பு துணை இயக்குநராக நியமிக்கலாம்?

(A) 5 Years
5 ஆண்டுகள்

(B) 7 Years
7 ஆண்டுகள்

(C) 8 Years
8 ஆண்டுகள்

(D) 10 Years
10 ஆண்டுகள்

75. The State Government with whose consultation, may form sub divisions from the sessions division?

மாநில அரசு யாருடைய ஆலோசனையின் பேரில் மாவட்ட அமர்வு பிரிவை (Sessions division) அமர்வு உட்பிரிவுகளாக (Sub&-division) பிரிக்கலாம்?

(A) High Court
உயர்நீதிமன்றம்

(B) Governor of State
மாநில ஆளுநர்

(C) Home Minister
உள்துறை அமைச்சர்

(D) District Administration
மாவட்ட நிர்வாகம்

76. A person who committed an offence not punishable with death or imprisonment for life, appears or brought before court and if he is under the age of 16 on that date, which court can try the said case?

மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனைக்குரியதல்லாத குற்றம் செய்த ஒருவர் நீதிமன்றம் முன்பு வருகின்ற அல்லது கொண்டு வரப்படுகின்ற தேதியன்று 16 வயதிற்குட்பட்டு இருந்தால் அவர் எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டும்?

(A) by the court of sessions
அமர்வு நீதிமன்றத்தால்

(B) by the court of first class Magistrate
முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தால்

(C) by the court of chief judicial magistrate or the court specially empowered by the children's Act 1960
தலைமை குற்றவியல் அல்லது 1960 ஆம் ஆண்டு குழந்தைகள் சட்டப்படி சிறப்பாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தால்

(D) by the court of second class Magistrate
இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தால்

77. In default of payment of fine imposed in a criminal case, how much term of imprisonment shall be inflicted by a Magistrate?

குற்ற வழக்கில் அபராதத் தண்டனை வழங்கும் போது அபராதத்தை கட்டத்தவறினால் எவ்வளவு கால அளவிற்கு ஒரு நடுவர் தண்டனை வழங்கலாம்

(A) Exceeding two years
இரண்டு ஆண்டிற்கு மேல்

(B) Not exceeding one year
ஓர் ஆண்டிற்கு மிகாமல்

(C) ¼ th of term of imprisonment which the Magistrate is competent to inflict as punishment for the offence and not in excess of his power
ஒரு குற்றத்திற்கு நடுவர் வழங்கக்கூடிய தண்டனையில் நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமலும் நடுவரின் அதிகாரத்திற்கு மிகாமலும் வழங்கலாம்

(D) ¾ th of the term of imprisonment which the Magistrate is competent to inflict as punishment for the offence and exceeding his power
ஒரு குற்றத்திற்கு நடுவர் வழங்கக் கூடிய தண்டனையில் நான்கில் மூன்று பங்கிற்கு மிகாமலும் நடுவரின் அதிகாரத்திற்கு மேலாக

78. When a warrant is directed to a person other than a Police Officer for execution and when he is having the warrant in hand who can help the person to execute the warrant?

பிடிகட்டளை ஒன்று காவல் அலுவலர் அல்லாத ஒருவருக்கு குறிப்பிட்டு அனுப்பிருக்கும் போது அவர் மேற்படி பிடிகட்டளையை கையில் வைத்திருக்கும் போது அதை நிறைவேற்ற யார் உதவலாம்?

(A) Any Police Officer
எந்த காவல் அதிகாரியும்

(B) Any Army Person
எந்த ராணுவ அதிகாரியும்

(C) Any Public Person
எந்த பொது மக்களும்

(D) Any Home Guard Person
எந்த ஊர் காவல் படையினரும்

79. When a person convicted in a theft case for more than 3 years is again convicted for more than 3 years in a theft case how much maximum period the court may order to notify his address after his release under section 356 Cr. P.C?

3 ஆண்டுகளுக்கு மேல் திருட்டு வழக்கில் தண்டனைப் பெற்ற நபர் மீண்டும் வேறு ஒரு திருட்டு வழக்கில் மீண்டும் 3 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெறுவராரேயானால் தண்டனை முடிவுற்று வெளியில் வரும் போது கு.மு.வ.ச பிரிவு 356 ன் படி இருப்பிடத்தை அதிகப்பட்சம் எத்தனை ஆண்டுகளுக்கு அறிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிடலாம்

(A) 2 years
2 ஆண்டுகள்

(B) 3 years
3 ஆண்டுகள்

(C) 4 years
4 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

80. Every person residing in a village shall inform about unnatural death and suspicious death of a person to whom forth with?

கிராமத்தில் குடியிருக்கின்ற ஒவ்வொருவரும் அந்தக் கிராமத்தில் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கும் மரணம் பற்றியும், இயற்கைக்கு மாறான மரணம் பற்றியும் உடனடியாக யாருக்குத் தெரிவிக்க வேண்டும்?

(A) Police Station
காவல் நிலையத்திற்கு

(B) Magistrate
நடுவருக்கு

(C) Whichever of the above is nearer
மேற்படி இருவரில் அருகாமையில் உள்ளவருக்கு

(D) District Collector
மாவட்ட ஆட்சித்தலைவருக்கு

81. By whom, Police Control Room in every District shall be established?

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் காவல்துறைக் கட்டுப்பாட்டு அறை யாரால் ஏற்படுத்தப்படவேண்டும்?

(A) State Government
மாநில அரசு

(B) District Collector
மாவட்ட ஆட்சித்தலைவர்

(C) Superintendent of Police
காவல் கண்காணிப்பாளர்

(D) Director General of Police
காவல்துறை இயக்குநர்

82. With whose consent, member of Armed forces of the union shall be arrested for anything done or purported to the done by him in the discharge of his official duties?

ஆயுதப்படையைச் சேர்ந்தவர் எவரையும், தம் அலுவல்முறைக் கடமைகளை ஆற்றுவதில் அவர் செய்த அல்லது செய்ததாகக் கருதப்பட்ட எதற்காகவும் கைது செய்வதற்கு யாருடைய சம்மதம் தேவை?

(A) Central Government
மத்திய அரசு

(B) Home State
சொந்த மாநில அரசு

(C) Minister of Defence
பாதுகாப்பு அமைச்சர்

(D) President of India
குடியரசுத் தலைவர்

83. Maximum how long a Magistrate shall authorise the detention of the accused person where the investigation relates to an offence punishable with death, imprisonment for life or imprisonment a term of not less than ten years

மரண தண்டனை ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தில் சம்பந்தப்பட்ட எதிரியை புலன் விசாரணைக்காக அதிகபட்சமாக எவ்வளவு காலம் காவலில் வைக்கலாம்?

(A) 60 days
60 நாட்கள்

(B) 45 days
45 நாட்கள்

(C) 90 days
90 நாட்கள்

(D) 100 days
100 நாட்கள்

84. In a summon case, if the investigating officer has not completed the investigation within which period prescribed in this code from the date of arrest, the Magistrate may issue order for stopping further investigation?

ஓர் அழைப்பாணை வழக்கில் புலன் விசாரணை செய்யும் அதிகாரி எதிரி கைது செய்யப்பட்டதிலிருந்து எந்த கால அளவிற்குள் விசாரணையை முடிக்கவில்லை என்றால், மேல் விசாரணையை நிறுத்தக்கோரி ஒரு நீதித்துறை நடுவர் உத்தரவிடலாம்?

(A) One month
1 மாதம்

(B) 18 months
18 மாதங்கள்

(C) 2 years
2 ஆண்டுகள்

(D) 6 months
6 மாதங்கள்

85. In a summons case, if the investigating officer has not completed his investigation within a period of six months from the date of arrest of accused, and if the Magistrate stopped further investigation how the investigation officer may proceed further investigation?

ஒரு அழைப்பாணை வழக்கில் எதிரி கைது செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் புலன் விசாரணை முடிக்கப்படவில்லை என்பதற்காக நீதித்துறை நடுவர் மேல் விசாரணையை நிறுத்தக் கோரி உத்தரவிட்டபின், புலன் விசாரணை அதிகாரி எவ்வாறு தொடரலாம்?

(A) With the permission of the Superintendent of police
காவல் கண்காணிப்பாளர் அனுமதி பெற்று

(B) With the permission of the Inspector of Police
காவல் ஆய்வாளர் அனுமதி பெற்று

(C) With the permission of the concerned Magistrate
சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவரின் அனுமதி பெற்று

(D) With the permission of the Session Judge
அமர்வு நீதிபதியின் அனுமதி பெற்று

86. Every Summons issued by the court is to be in the form of

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ்வோர் அழைப்பாணையும் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?

(A) Writing in duplicate
எழுத்து வடிவில் இரட்டைப்படிகளில்

(B) Signed by the presiding officer of the court
அந்த நீதிமன்றத்தின் தலைமை அலுவலரின் கையொப்பம் இருக்க வேண்டும்

(C) Bearing the seal of the court
அந்த நீதிமன்றத்தின் முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும்

(D) All the above
மேற்கூறிய அனைத்தும்

87. If a Police Officer arrested an accused on the point of apprehension, before whom he shall be produced?

ஒரு காவல் துறை அதிகாரி சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் எதிரியை யார் முன்னிலையில் ஆஜர்படுத்த வேண்டும்?

(A) Judicial Magistrate
நீதித்துறை நடுவர்

(B) Executive Magistrate
நிர்வாகத்துறை நடுவர்

(C) District Magistrate or Sub -divisional Magistrate
மாவட்ட நடுவர் அல்லது உட்கோட்ட நடுவர்

(D) Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நடுவர்

88. While taking action under section 82 and 83 of Cr.P.C against the absconding accused, ordering attachment of his property which is immovable, paying revenue to the State Government, attachment shall be made by whom?

தலைமறைவாக உள்ள எதிரி மீது கு.வி.மு.ச பிரிவு 82. 83 ன் படி நடவடிக்கை எடுக்கும் போது எதிரியின் அசையா சொத்துக்களை ஜப்தி செய்ய உத்தரவிடும்பட்சத்தில் அந்த சொத்து மாநில அரசுக்கு வருவாய் செலுத்தும் சொத்தாக இருப்பின் அந்த சொத்தை யார் ஜப்தி செய்யலாம்?

(A) Revenue Inspector
வருவாய் ஆய்வாளர்

(B) Tahsildar
தாசில்தார்

(C) Revenue Divisional Officer
வருவாய் கோட்டாட்சியர்

(D) District Collector
மாவட்ட ஆட்சித்தலைவர்

89. Without whose order, the police officer shall not investigate a non-cognizable case

பிடி கட்டளை இல்லாமல் பிடிக்கக் கூடாத வழக்கில் யாருடைய அனுமதி பெற்று காவல் துறை அதிகாரி புலன் விசாரணை செய்யலாம்?

(A) Superintendent of Police
காவல் கண்காணிப்பாளர்

(B) Executive Magistrate
நிருவாகத்துறை நடுவர்

(C) Sub Divisional Magistrate
உட்கோட்ட நடுவர்

(D) Magistrate having Jurisdiction to try the case
அந்த வழக்கு விசாரிக்க அதிகாரம் கொண்ட நடுவர்

90. Which of the following Judge is competent to take cognizance of cases committed by a Magistrate involving sessions offence, as a court of original jurisdiction?

அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்க கூடிய குற்ற வழக்கை நீதித்துறை நடுவரால் மேல் விசாரணைக்கு அனுப்பப்படும் போது எந்த நீதிபதி நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அதிகாரம் பெற்றவர்?

(A) Sessions Judge
அமர்வு நீதிபதி

(B) 1st Additional Sessions Judge
1வது கூடுதல் அமர்வு நீதிபதி

(C) Assistant Sessions Judge
உதவி அமர்வு நீதிபதி

(D) 2nd Additional Sessions Judge
2வது கூடுதல் அமர்வு நீதிபதி

91. When a Magistrate taking cognizance of an offence upon information received from the person other than police officer the accused, prays to transfer case to some other magistrate. who is authorised to transfer such case to other magistrate?

காவல் துறையினர் அல்லாத ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் ஒரு நீதித்துறை நடுவர் ஒரு வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நிலையில் எதிரியின் விண்ணப்பத்தின் பேரில் வேறு நீதித்துறை நடுவர் விசாரிக்க மாற்றும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) Sessions Judge
அமர்வு நீதிபதி

(B) District Magistrate
மாவட்ட நடுவருக்கு

(C) High Court Judge
உயர்வு நீதிமன்ற நீதிபதிக்கு

(D) Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நடுவருக்கு

92. When a Magistrate committed a case, involving offence exclusively triable by court of sessions notification has to be given to whom?

அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக் கூடிய குற்ற வழக்கை ஒரு நடுவர் அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பும் போது யாருக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும்?

(A) District Magistrate
மாவட்ட நடுவர்

(B) Advocate for the accused
எதிரியான வழக்கறிஞர்

(C) Superintendent of Police
காவல் கண்காணிப்பாளர்

(D) Public Prosecutor
அரசு குற்றத்துறை வழக்கறிஞர்

93. Who is empowered to direct the case, committed for trial, to try in any sessions division, provided such direction is not repugnant to any direction already issued by High Court or Supreme Court?

மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட வழக்கை எந்த அமர்வு நீதிமன்ற பிரிவும் விசாரிக்கலாம் என, ஏற்கனவே உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு முரண்படாத வகையில் யார் உத்தரவிடலாம்?

(A) Central Government
மத்திய அரசு

(B) State Government
மாநில அரசு

(C) Governor of State
மாநில ஆளுநர்

(D) Director General of Police
காவல் துறை இயக்குநர்

94. When an offence is committed outside India by a Citizan of India on the high seas or elsewhere, with whose previous sanction, he may be dealt with at any place in India?

இந்தியாவிற்கு வெளியே நடுக்கடலிலோ அல்லது வேறு எங்குமோ இந்திய குடிமக்களால் ஒரு குற்றம் செய்யப்படும் போது அவரை இந்தியாவில் எந்த இடத்திலும் விசாரிக்க யாருடைய முன் அனுமதி பெற வேண்டும்?

(A) State Government
மாநில அரசிடம்

(B) Central Government
மத்திய அரசிடம்

(C) Supreme Court of India
உச்சநீதிமன்றத்திடம்

(D) President of India
இந்திய ஜனாதிபதியிடம்

95. When an offence is committed outside India, by not being Indian Citizen on any ship or aircraft registered in India, with whose previous sanction he may be dealt with at any place in India?

இந்தியாவிற்கு வெளியே இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பலிலோ, விமானத்திலோ இந்திய குடிமகன் அல்லாத ஒருவர் குற்றம் ஒன்றை செய்வாரேயானால் யாருடைய முன் அனுமதியின் பேரில் இந்தியாவில் எந்த இடத்திலும் அவர் மீது வழக்கு தொடரலாம்?

(A) President of the country which the person belongs
அந்த நபர் சார்ந்த நாட்டின் குடியரசு தலைவரின்

(B) President of India
இந்திய குடியரசு தலைவரின்

(C) Central Government of India
இந்திய மத்திய அரசின்

(D) Supreme Court of India
இந்திய உச்சநீதிமன்றத்தின்

99. When a person charged with an offence and the facts are proved which reduce it to a minor offence whether he can be convicted for the minor offence though he is not charged with it?

ஒரு நபர் மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணையில் அக்குற்றச்சாட்டிற்கு குறைவான குற்றம் செய்ததாக நிரூபிக்கப்படும் போது அக்குற்றத்திற்கு குற்றச்சாட்டு வனையாத நிலையில் அவர் குறைந்த குற்றத்திற்கு தண்டிக்கப்படலாமா?

(A) may be discharged
அவர் விடுவிக்கப்படலாம்

(B) charge may be framed afresh for the minor offence
குறைந்த குற்றத்திற்கு புதிதாக குற்றச்சாட்டு வனையலாம்

(C) may be convicted for the lessor offence
குறைந்த குற்றத்திற்கு தண்டிக்கலாம்

(D) fresh trial may be conducted
புதிதாக விசாரணை நடத்தலாம்

100. Which of the hospitals shall immediately provide first aid or medical treatment to the victim of rape or throwing of acid, on free of cost?

கற்பழிப்பு மற்றும் திராவகம் வீச்சு சம்பவங்களில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எந்த மருத்துவமனையில் இலவசமாக முதல் உதவி அல்லது சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்?

(A) Public or Private hospital
பொது அல்லது தனியார் மருத்துவமனையில்

(B) Central or State Government hospital
மத்திய அல்லது மாநில அரசு மருத்துவமனையில்

(C) Local body or any other persons hospital
உள்ளாட்சி அல்லது எந்த நபராலும் நடத்தப்படும் மருத்துவமனைகளில்

(D) All the above
இவை அனைத்திலும்

96. Who shall investigate the case falls under prevention of Atrocities against schedule caste and schedule tribes Act 1989?

பட்டியல் இன மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989ன் கீழ் வரும் வழக்குகளை யார் புலன் விசாரணை செய்யலாம்?

(A) Inspector of Police
காவல் ஆய்வாளர்

(B) Deputy Superintendent of Police
காவல் துணை கண்காணிப்பாளர்

(C) Sub Divisional Magistrate
உட்கோட்ட நடுவர்

(D) Officer Incharge of the police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலர்

97. When the charge can be altered or added after framing of charge against the accused?

எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட பின்பு எப்பொழுது குற்றச்சாட்டை மாற்றலாம் அல்லது கூட்டலாம்?

(A) Before examination of prosecution witness
அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்கும் முன்பு

(B) Before examination of defence witness
எதிரி தரப்பு சாட்சிகளை விசாரிக்கும் முன்பு

(C) Before examination of investigation offer
புலன் விசாரணை அதிகாரியை விசாரிக்கும் முன்பு

(D) At any Stage before pronouncement of Judgement
தீர்ப்பு பகிரப்படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும்

98. When a person committed more offences than one of the same kind within the space of twelve months from the first to the last of such offences, can be tried with how many numbers of charges in one trial?

ஒரு நபர் ஒரே வகையைச் சார்ந்த ஒன்றுக்கும் மேற்பட்ட குற்றங்களை முதல் குற்றத்திலிருந்து கடைசி குற்றம் வரை 12 மாத இடைவெளிக்குள் செய்ததாக குற்றம் சாட்டும்போது எத்தனை குற்றங்களை ஒரே விசாரணையில் விசாரிக்க முடியும்?

(A) Not exceeding twelve
பன்னிரண்டுக்கு மிகாமல்

(B) Not exceeding six
ஆறுக்கு மிகாமல்

(C) Not exceeding two
இரண்டிற்கு மிகாமல்

(D) Not exceeding three
மூன்றிற்கு மிகாமல்